# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்*

---

*(2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்**

[*2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 15/2011*

**2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்பு தல் வரிச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2011ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 2011ஆம் ஆண்டு சனவரி 1ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும். *சுருக்கப் பெயர்.*

**2.** 2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது (இது இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "வழங்குகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற;" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:- *2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"வழங்குகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற; அல்லது

(ஈ) பந்தி (ஆ) என்பதன் ஏற்பாடுகள் எந்த உற்பத்தியாளருக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த உற்பத்தியாளர் ஒருவராகவுள்ள அப்பொருளின் உற்பத்தியாளரினால் நடாத்தப்படும் விற்பனை தவிர்ந்த ஏதேனும் பொருளின் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனைத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற,".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில்-

(அ) "ஒரு சதவீதம் என்ற வீதத்தில்" என்னும் சொற்களிலிருந்து "இறுக்கப்படுதல் வேண்டும்:" என்பது வரையான சொற்களுக்குப் பதிலாக

“இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தோதான வீதத்தில் கணக்கிடப்பட்டு, இச்சட்டம் ஏற்புடைத்தாகின்ற ஒவ்வோர் ஆளினாலும் பின்வரும் முறையில் இறுக்கப்படுதல் வேண்டும்:-” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ii)ஆம் பந்தியில் “(1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “(1)ஆம் உட்பிரிவின் “(ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்திகளில்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்”.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்-

(அ) அதற்கான (i)ஆம் பந்தியில், “அப்பொருளின் பெறுமதி என்று பொருளாகும்;” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அப்பொருளின் பெறுமதி என்று பொருளாகும். ஆனால், அது இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தவிர்க்கப்பட்ட பொருளின் பெறுமதியை உள்ளடக்காது;” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (ii)ஆம் பந்தியில் “அத்தகைய ஆளினால் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு பொருளினதும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அத்தகைய ஆளினால் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட இச்சட்டத்திற்கான முதலாவது அட்டவணையில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் தவிர்க்கப்பட்ட பொருள் தவிர்ந்த, ஒவ்வொரு பொருளினதும்;”; என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) (iii)ஆம் பந்தியில் ''அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சேவையை'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

''அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இச்சட்டத்துக்கான முதலாவது அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தவிர்க்கப்பட்ட சேவை தவிர்ந்த ஏதேனும் சேவையை இலங்கையில் வழங்குவதிலிருந்து பெறப்படற்பாலதான, அது பெறப்பட்டிருப்பினுஞ்சரி பெறப்படா திருப்பினுஞ்சரி, பணத்தொகை என்று பொருளாகும்;

(iv) இரண்டாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்ட எவரேனும் ஆள் மற்றும் இயைபான ஏதேனும் காலாண்டு தொடர்பாக-

(1) மருத்துவத்துக்குரியன;

(2) 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின்கீழ் விசேட வியாபாரப் பண்டங்கள் அற வீட்டுக்கு அமைய ஏதேனும் பொருள், அத்தகைய பொருள் அத்தகைய பொருளின் இறக்கு மதியாளரினால் அதன்பின்னர் விற்பனை செய்யப்படுகின்ற விடத்து; அத்துடன்

(3) வைரக்கற்கள் அல்லது நகைகள் என்பன வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவை ஏற்றுக்கொள்வ தற்கு இலங்கை மத்திய வங்கியி

னால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் வெளிநாட்டு நாணயக் கொடுப்பனவின் மீது விற்பனை செய்யப்படின்,

அக்காலாண்டின் விற்பனையிலிருந்து பெறப்படற்பாலதான அது பெறப்பட்டிருப்பினுஞ்சரி, பெறப்படாதிருப்பினுஞ்சரி பணத்தொகை என்று பொருளாகும்.".

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில்–

(அ) ''அப்பிரிவின் (ii)ஆம் அல்லது (iii)ஆம் பந்தியில்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அப்பிரிவின் (ii), (iii) அல்லது (iv) ஆம் பந்தியில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (iii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(iv) நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறான ஏதேனும் சர்வதேச நிகழ்வு தொடர்பில் ஏற்றுமதி அபிவிருத்தி தள்ளுபடியின் கீழ் செலுத்தப்பட்ட தள்ளுபடி;

(v) நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறான ஏதேனும் சர்வதேச நிகழ்வு தொடர்பில் ஏதேனும் பண்டங்கள் அல்லது சேவைகளை வழங்குவதிலிருந்தான ஏதேனும் மொத்த வரவு (2010 மே 12ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக).".

(4) அதன் (4) ஆம் உட்பிரிவில்–

(அ) "2 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "(2) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் அல்லது (ஈ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (i)ஆம் பந்தியில் "அவ்வியைபான காலாண்டுக்காக அத்தகைய ஆளின் பொறுப்பாக்கக்கூடிய மொத்த வரவு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய காலாண்டு 2011 சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற இயைபான காலாண்டு ஒன்றாக இருப்பின் அத்துடன் அவ்வியைபான காலாண்டுக்காக அத்தகைய ஆளின் பொறுப்பாக்கக்கூடிய மொத்த வரவு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(இ) அதன் (ii)ஆம் பந்தியில்–

(i) "அவ்வியைபான காலாண்டுக்காக விருப்புச்சார் சேர்பெறுமதி வரியை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011 சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் அவ்வியைபான காலாண்டுக்காக விருப்புச்சார் சேர்பெறுமதி வரியை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ii) "விருப்புசார் சேர்பெறுமதி வரியை செலுத்தியிருப்பின்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"விருப்புசார் சேர்பெறுமதிவரியை செலுத்தியிருப்பின்;

(ஈ) பந்தி (ii) ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை சேர்ப்பதன் மூலமும் -

(iii) அத்தகைய இயைபான காலாண்டு 2011 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டாக இருந்து அத்துடன் (iv) மற்றும் (v) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சேவைகள் தவிர்ந்த வேறு ஏதேனும் பண்டங்கள் அல்லது சேவை களின் வழங்கலிலிருந்தான அத்தகைய ஆளின் பொறுப்பாகக்கூடிய மொத்த வரவு, ஐந்து இலட்சம் ரூபா பணத் தொகையை விஞ்சாதிருப்பின்; அத்துடன்

(iv) அத்தகைய காலாண்டு 2011 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற காலாண்டொன்றாக இருந்து அத்துடன் -

(அ) ஹோட்டல் ஒன்று, விருந்தினர் விடுதி, சிற்றுண்டிச்சாலை அல்லது வேறு அதேபோன்ற தொழிலை நடாத்துவதிலிருந்து;

(ஆ) உள்ளூரில் பெறப்பட்ட எவையே னும் கமத்தொழில் விளைவுப் பொருட்களை விற்பனைக்காக ஆயத்தம் செய்கையில், பதனிடு வதிலிருந்து;

(இ) அந்நோக்கத்திற்காக உள்ளூரில் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறு வனத்தினால் கல்விச் சேவை களை வழங்குவதிலிருந்து; அல் லது

(ஈ) தொழிலாளர்களை (மனிதவலு) வழங்குவதிலிருந்து,

அத்தகைய ஆளின் பொறுப்பாகக்கூடிய மொத்த வரவு இருபத் தைந்து மில்லியன் ரூபாவான பணத்தொகையை விஞ்சுதலாகாது.”.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அப்பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*"வரிக் கொடுப்பனவு.*

"4. இரண்டாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி, (இ) என்னும் பந்தி அல்லது (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் ஒவ்வொருவரும், இயைபான ஏதேனும் காலாண்டுக்காக அத்தகைய ஆளின்மீது வரிமதிப் பீடெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லையென்பது எவ்வாறிருப்பினும்-

(i) அக்காலாண்டின் முதல் மாதத்திற்காக செலுத்தப்படற்பாலதான வரி, அக்காலாண் டின் இரண்டாம் மாதத்தினது இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற் காகச் செலுத்தப்படற்பாலதான வரி, அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தினது இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ;

(iii) அக்காலாண்டுக்காக செலுத்தப்படற்பால தான வரி மீதி அவ்வியைபான காலாண் டின் முடிவை உடனடுத்து வருகின்ற மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் அக்காலாண்டுக்கு செலுத்தற்பாலதான வரியிலிருந்து பந்திகள் (i) மற்றும் (ii) இன்கீழ் செலுத்தப்பட்ட வரியைக் கழிப்பதன்மூலம் கணிக்கப்பட்ட,

ஆணையாளர் தலைமையதிபதியினால் அதற் கெனக்குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அவரிடம் செலுத்துதல் வேண்டும்.".

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடவும்:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

"வரி வரவு.

6. இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் வரிக்கு ஆளான பண்டங்களின் உற்பத்தியில் இச்சட்டத்தின்கீழ் வரிக்கொடுப்பனவுக்கு பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரொருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அல்லது தாமாகவே இறக்குமதி செய்த எவையேனும் பண்டங்களை முழுமையாக அல்லது பகுதியளவில் பயன்படுத்துமிடத்து அத்தகைய உற்பத்தியாளர் அத்தகைய பொருட்கள் மீது செலுத்தப்பட்ட அத்தகைய வரி தொடர்பில் அத்தகைய ஆளினால் உற்பத்தி செய்யப்பட்டவையும் இச்சட்டத்தின்கீழ் வரிக்கு ஆளானவையுமான பண்டங்களின் பெறுமதியின் வீதாசாரப்படி வரி வரவுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 6அ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

"இஸ்லாமிய நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கல் களிலிருந்து வரும் மொத்த விற்பனை வரவு வரி அறவிடப் படற்பால தாதல்.

6அ. (1) ஏதேனும் இஸ்லாமிய நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கல் தொழிலிலிருந்துவரும் மொத்த விற்பனை வரவு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதி களின்படி வரி அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) ஏதேனும் குறிப்பிட்ட இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல் எந்த அளவுக்கு வரிக்குப் பொறுப்புடையதாகும் என்பதைத் தீர்மானிப்பதற்காக உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமை அதிபதி –

(அ) இஸ்லாமிய நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கலாக அமையும் சூழ்நிலைகளை இனம்காணுதல் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கலிலிருந்தெழும் இலாபத்தையும் வருமானத்தையும் ஆய்ந்தறிதல்,

ஆகிய நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளையும் வழிகாட்டு நெறிகளையும் காலத்துக்குக் காலம் வழங்குதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ''பொருள்'' என்னும் வரைவிலக்கணத்தின் சொல்லமைப்பில் ''ஏதேனும் கமத்தொழில் அல்லது தோட்டக்கலை விளைச்சலை உள்ளடக்கும், ஆனால் இச்சட்டத்திற்கான அட்டவணையின் Iஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவிர்க்கப்பட்ட பொருளை உள்ளடக்காது;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் கமத்தொழில் அல்லது தோட்டக்கலை விளைச்சலை உள்ளடக்கும், ஆனால் 2011ஆம் ஆண்டு சனவரி 1ஆந் தேதிக்கு முன்னராக முடிவடைந்த ஏதேனும் காலப்பகுதிக்காக இச்சட்டத்துக்கான அட்டவணையின் Iஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவிர்க்கப்பட்ட பொருளை உள்ளடக்காது;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) ''சேவை'' என்னும் வரைவிலக்கணத்தின் சொல்லமைப்பில் ''ஏதேனும் விலக்களிக்கப்பட்ட சேவைகளை உள்ளடக்கமாட்டாது;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''2011ஆம் ஆண்டு சனவரி 1ஆந் தேதிக்கு முன்னராக முடிவடைந்த ஏதேனும் காலப்பகுதிக்காக ஏதேனும் விலக்களிக்கப்பட்ட சேவைகளை உள்ளடக்கமாட்டாது;'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) ''ஆள்'' என்னும் வரைவிலக்கணத்தின் சொல்லமைப்பில் ''ஏதேனும் கம்பெனியை, ஆட்களின் குழுவை அல்லது ஏதேனும் பங்காண்மையை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் கம்பெனியை, ஆட்களின் குழுவை அல்லது ஏதேனும் பங்காண்மையை'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணையைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) இதற்கான ''அட்டவணை'' என்பதனை ''முதலாம் அட்டவணை'' என மீளப்பெயரிடுதல் மூலமும்;

(2) அத்தகைய அட்டவணையின் பாகம் I இல்-

(அ) அதன் (xiii)ஆம் விடயத்தில் ''ஔடதப் பொருட்கள் ; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஔடதப் பொருட்கள்;'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (xv) ஆம் விடயத்தில் ''பயன்படுத்துவதற்கான ஏதேனும் பொருள்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பயன்படுத்துவதற்கான ஏதேனும் பொருள்;'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) அதன்(xv)ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் இனங்களைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(xvi) நாட்டின் பொருளாதார நலனைக் கருத்திற்கொண்டு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டவாறு அரசாங்கத்தால் பெறப்பட்ட வெளிநாட்டு நிதிகளிலிருந்து அல்லது நன்கொடைகளிலிருந்து கொண்டுநடாத்தப்படும் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டமொன்றுக்கு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்கள்;

(xvii) HS குறியீட்டிலக்கம் 27 14 என்பன்கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட நிலக்கீல்;

(xviii) *1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் அல்லது அத்தகைய பதிவுக்கு ஏற்பாடு செய்யும் மாகாண சபைகளால் சட்டவாக்கம் செய்யப்பட்ட அந்தந்த நியதிச் சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட ஏதேனும் பொருள்; அத்துடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய் யப்பட்ட லக் சதோசாவினாலானதுமான ஏதேனும் பண்டங்கள் அல்லது சேவைகள்;*

(xix) HS *குறியீடுகள் 8701.10.10, 8701.10.90, 8701.90.10 அத்துடன் 8701.90.20 என்பவற்றின்கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட ட்ராக்டர்கள்;*

(xx) *இயைபான அதிகாரசபையின் அங்கீகாரத்திற்கமைய ஔடதங்களின் உற்பத்திக்கென இறக்குமதி செய்யும் மூலப்பொருட்கள் அல்லது சிப்பப் பொருட்கள்;*

(xxi) *இறக்குமதி செய்யப்பட்ட தங்கம் (2010 மாச்சு 1 ஆந் தேதியிலிருந்து ) ;*

(xxii) *இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு நன்மையானதானதென நிதி என்னும் விடயத்திற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரால் (2010 யூலை 1 ஆம் தேதியிலிருந்து) பண்டங்கள் வேலை பூர்த்தியடைந்ததன் பின்னர் மீள் ஏற்றுமதி செய்யப்படும் என்ற நிபந்தனையின் மீது அங்கீகரிக்கப்பட்ட பாரிய அளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்*

களின் பாவனைக்கென தற்காலிக அடிப்படையில் இறக்குமதி செய்யப் பட்ட பொறி, பொறித்தொகுதி அல் லது உபகரணம்;

(xxiii) *(2010 யூன் 1 ஆம் திகதியிலிருந்து)* HS குறியீடுகள் *4907.00.90* என்பதன்கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்டவையான இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்கள்;

(xxiv) இயைபான அதிகாரசபையின் அங்கீகாரத்திற்கமைய ஆயுர்வேத ஔடதவியலை அல்லது ஆயுர்வேத தயாரிப்பைச் சேர்ந்த ஆயுர்வேதத் தயாரிப்புகளின் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்கள் அல்லது சிப்பப் பொருட்கள்;

(xxv) *(2011.01.18ஆம் தேதியிலிருந்து)* HS *0102.10* அல்லது HS *0104.20.10* என்பதன் கீழான தனி இனத்தைச் சேர்ந்த வளர்ப்பு விலங்குகள் HS *8434.10* என்பதன்கீழான பால் கறக்கும் பொறிகள், HS *8434.20* என்பதன்கீழான பாற்பண்ணைப் பொறித்தொகுதி இறக்குமதி செய்யும் நேரத்தில் HS *8434.90* என்பதன்கீழ் உதிரிப்பாகங்கள்;

(xxvi) இருபத்தைந்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத பெறுமதியுடைய தொழில் தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியால் விதித்துரைக் கப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கமைய மாதிரிகளின் இறக்குமதி.".

(3) அட்டவணையின் II ஆம் பாகத்தில் -

(அ) அதன் (vii)ஆம் விடயத்தில் "உப ஒப்பந்தக்காரர் ஒருவராக அல்லாத நிர்மாண ஒப்பந்தக்காரர் ஒருவரின் சேவை," என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்:-

"(i) 2011 சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் உப ஒப்பந்தக்காரர் ஒருவராக அல்லாத நிர்மாண ஒப்பந்தக்காரர் ஒருவரின்; அல்லது

(ii) 2011 சனவரி 1அந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஒப்பந்தக்காரர் அல்லது உபஒப்பந்தக்காரர் ஒருவரின்,

சேவை.";

(ஆ) அதன் (xii)ஆம் விடயத்தில் "ஒரு ஹோட்டல், விருந்தினர் விடுதி, உணவகம் ஒன்றை அல்லது அதனையொத்த வேறு தொழிலை நடத்துதல்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2011 சனவரி 1ஆந் தேதிக்கு முன்னராக முடிவடைந்த ஏதேனும் காலப்பகுதிக்காக ஒரு ஹோட்டல், விருந்தினர் விடுதி, உணவகம் ஒன்றை அல்லது அதனையொத்த வேறு தொழிலை நடத்துதல்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்;

(இ) அதன் (xiii)ஆம் விடயத்தில் "உள்ளூர் விளைபொருளின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உள்ளூர் விளைபொருளின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(ஈ) அதன் (xxiii)ஆம் விடயத்தில் "எவரேனும்" பொது விற்பனைகள் முகவரின்" சேவைகள்."

என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் "பொது விற்பனைகள் முகவர்கள்" சேவைகள்; என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(உ) அதன் (xxiii) ஆம் விடயத்தை உடனடுத்து பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் ;

"(xxiv) (1.யூலை.2010 இலிருந்து பயனுறும்) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு நன்மை மயமானதாகவுள்ள நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டமாகவுள்ள, பாரிய அளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக வெளிநாட்டு ஆலோசனைகளுடன் வழங்கப்பட்ட சேவைகள்;

(xxv) நாட்டின் பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு அமைச்சரால் அங்கீகரிக்கப் பட்டவாறு அரசாங்கத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு நிதியங்கள் அல்லது நன்கொடைகளிலிருந்து ஏதேனும் குறித்த நிகழ்ச்சித்திட்டமொன்றைக் கொண்டு நடாத்துவதற்காக வழங்கப்பட்ட சேவைகள்;

(xxvi) சர்வதேச போக்குவரத்து தொடர்பில் துறைமுகம் அல்லது விமானத்திற்கு வழங்கப்பட்ட சேவைகள்;

(xxvii) வெளிநாட்டு நாணயங்களில் செய்யப்பட்ட கொடுப்பனவிற்காக சர்வதேச சந்தைக்கான கப்பல் கட்டுதல் தொடர்பில் வழங்கப்பட்ட சேவைகள்;

(xxviii) தொலைத்தொடர்பு சேவைகள்;

(xxix) உள்ளூரில் ஆக்கப்பட்ட மென்பொருளின் வழங்கல்;

(xxx) ஏதேனும் அரசாங்க திணைக்களம் அமைச்சு அல்லது அரசாங்கத்தினால் முழுமையாக சொந்தமாக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியினால் வழங்கப்பட்ட சேவைகள்;

(xxxi) ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெட்டினால் வழங்கப்பட்ட சேவைகள்;

(xxxii) மிஹின் எயர் (பிறைவேட் லிமிட்டெட்டினால்) வழங்கப்பட்ட சேவைகள்;

(xxxiii) எயர் லங்கா கேற்றறிங் சேர்விஸஸ் லிமிட்டெட்டினால் வழங்கப்பட்ட சேவைகள்;

(xxxiv) 1972ஆம் அண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் அல்லது மாகாண அமைப்பினால் சட்டவாக்கமாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் சங்கங்களினால் வழங்கப்பட்ட சேவைகள் அத்துடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட லக் சதோசாவினாலானதுமான ஏதேனும் வழங்கப்பட்ட சேவைகள்.

**9**. பின்வரும் புதிய அட்டவணை முதலாம் அட்டவணையை உடனடுத்து இரண்டாம் அட்டவணையாகச் சேர்க்கப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்திற்கு இரண்டாம் அட்டவணையைச் சேர்த்தல்.

"இரண்டாம் அட்டவணை (பிரிவு 3)

**இச்சட்டம் ஏற்புடைத்தாகும் எவரேனும் ஆளினால் செலுத்தப்படற்பால தான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி வீதங்கள்**

பாகம் I

*2009 ஏப்பிறல் 30 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கான பொறுப்பாகக்கூடிய மொத்த வரவின் மீது*

*- 01 சதவீதம்*

பாகம் II

*2009 மே 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் ஆனால் 2010 திசெம்பர் 31 இற்கு முன்னரான காலப்பகுதிக்கு -*

(1) *பொறுப்பாகக்கூடிய மொத்த வரவின் மீது (2009 யூலை 1 இலிருந்து 2010 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு உள்ளூரில் பெற்றுக்கொள்ளப் பட்ட நெல்லிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் மொத்த வரவு தொடர்பிலானது தவிர்ந்த வேறு)*

*- 03 சதவீதம்*

(2) *2009 யூலை 1 இலிருந்து 2010 திசெம்பர் 31 வரையான காலப் பகுதிக்கு உள்ளூரில் பெற்றுக் கொள்ளப்பட்ட நெல்லிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட அரிசியிலி ருந்தான மொத்த வரவின் மீது*

*- 1.5 சதவீதம்*

பாகம் III

*2011 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கான -*

*(1) மொத்த வரவின் மீது (ஏதேனும் பொருளின் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனையிலிருந்தான ஏதேனும் மொத்த வரவு தவிர்ந்த வேறு)*

*- 02 சதவீதம்*

*(2) ஏதேனும் பொருளின் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனையிலிருந்தான மொத்த வரவின் மீது -*

*(அ) ஏதேனும் விநியோகத்தரின் பொறுப்பாகக்கூடிய மொத்த வரவின் மூன்றில் நான்கு - இல்லை*

*(ஆ) விநியோகத்தரொருவரின் ஏதேனும் மொத்த வரவு தவிர்ந்த வேறு ஏதேனும் பொருளிலிருந்து (மொத்த விற்பனை) பொறுப்பாகக்கூடிய மொத்த வரவின் அரைப் பங்கு - இல்லை*

*(இ) பொறுப்பாகக்கூடிய மொத்த வரவின் மீதி*

*- 02 சதவீதம்*

*இரண்டாம் அட்டவணையின் பாகம் III இன் நோக்கத்திற்கு "விநியோகத்தர்" என்னும் சொல்லமைப்பு 2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவு சட்டத்தின் 13 ஆம் பிரிவில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*மாகாண சபைகளின் அரசிறை பிரித்தொதுக்குதல்.*

**10.** ஆணையாளர் தலைமையதிபதி, மாகாண சபை ஒவ்வொன்றினாலும் தேவைப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தைக் கருத்திற்கொண்டு திறைசேரிச் செயலாளர் காலத்திற்குக் காலம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய கால இடைவேளையிலும் அத்தகைய வீதாசாரங்களிலும் அந்தந்த மாகாண சபைகளுக்கு நாட்டைக் கட்டியெழுப்புதல் வரியாக சேகரிக்கப்பட்ட 33 1/3 சதவீதத்தினை மாற்றலாம்.

*குறித்த சில சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளால் செலுத்தப்படற்பாலதான வரிகளின் கொடுப்பன விலிருந்து அவற்றிற்கு விலக்களித்தல்.*

**11.** நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றை ஆண்டு மொத்த விற்பனை வரவாகக் கொண்ட தொழில் முயற்சியொன்றைக் கொண்டு நடாத்துபவரும் அல்லது கொண்டு நடாத்துகின்றதும் இச்சட்டத்தின்கீழ் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரியைச் செலுத்துவதற்கு ஆளானவரும் அல்லது ஆளானதும் பொதுவில் போர்ச் சூழல் ஒன்று நிலவுவதன் காரணமாக அல்லது அத்தகைய ஆளின் அல்லது பங்குடமையின் ஏதேனும் நிதி நெருக்கடி காரணமாக 2010

திசெம்பர் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலாண்டு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அவரால் அல்லது அதனால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி கொடுப்பனவில் தவணை தவறியுள்ளவருமான அல்லது தவணை தவறியுள்ளதுமான எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை இச்சட்டத்தின்கீழ் தவணை தவறுகையிலுள்ள வாறான அத்தகைய விதிப்பனவின் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அதன் பொருட்டு செய்யப்படும் வேண்டுகோளொன்றின்மீது தவணை தவறுகையிலுள்ள பணத்தொகை தொடர்பில் அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடமைக்கு விலக்களிப்புச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும் :

ஆயின், மேலும் எந்த ஆளுக்கு பங்குடமைக்கு விலக்களிப்புச் சான்றிதழ் வழங்கப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது பங்குடமை சமகாலத்தில் 2011 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வருங்கால வரிமதிப் பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அவரால் அல்லது அதனால் செலுத்தப்படற்பாலதாகக்கூடிய எல்லாப் பணத் தொகைகளினதும் கொடுப்பனவுக்கு அத்தகைய ஆள் அல்லது பங்குடமை பொறுப்புடையதாகும் என்ற பயன்பாட்டிற்கு எழுத்தி லான உறுதிப்பாடொன்றை உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.".

நட்டோத்தரவாதம்.

**12**. விடயத்திற்கேற்ப உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி முதன்மைச் சட்டவாக்கத்தின் முறையே 4 ஆம் அல்லது 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் 2011 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முடிவடை யும் காலப்பகுதியின்போது எந்த ஆளுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகின்றனவோ அந்த ஆளொருவரிட மிருந்து இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வீதப்படி கணிப்பிடப்பட்ட வரியைச் சேகரிக்குமிடத்து அத்தகைய சேகரிப்பானது எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியான வீதத்தில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுவதாகவும் கருதப் படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேகரிப்பு தொடர்பில்

எல்லா குடியியல் அல்லது குற்றவியல் வழக்கிற்கெதிராக விடயத்திற்கேற்ப உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி இத்தால் நட்டோத்தரவாதம் செய்யவும்படுகின்றார்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்